ம. பி. முதல் மந்திரி சுக்லா மீது லஞ்சக் குற்றம்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்

சென்னை: புரட்டாசி 20உ புதன் (6—10—54) | வெளியூர்: புரட்டாசி 21உ வியாழன் (7—10—54)

மலர்: 2 | இதழ்: 99

குற்றப் பட்டியலும், சான்றுகளும் பண்டிதரிடம் தரப்பட்டுள்ளதாம்!

பிரச்னையை மக்கள் சபையில் கிளப்ப நடைமுறையில் இடமில்லை

பதவியை துறந்து ஆய்வுக்குழுவிடம் அவர் வாக்குமூலம் தரவேண்டும்!

மக்கள் சபை ம. சோ. கட்சி செயலாளர் எஸ். குருபாதசாமியின் கோரிக்கை

நாகபுரி, அக். 5—

மத்தியப் பிரதேச முதல் அமைச்சர் ரவி சங்கர் சுக்லா மீது, லஞ்சக் குற்றமும், அதிகாரத்தைத் தவறான வழியில் செலுத்தின குற்றமும் சாட்டப்பட்டுள்ளது.

குற்றப் பட்டியலும், அவைகளை மெய்ப்பிக்கும் ஆதாரங்களும் இந்தியப் பிரதமர் நேருவிடம் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அவைகளிலிருந்து மந்திரியை விசாரித்தறிவதற்கான உத்தேச வழக்கு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

ஒரு தீர்மானமான உருவில், மக்கள் சபையில், இப்பிரச்சினையைக் கொண்டுவர முடியாமைக்கு, சபை நடைமுறை விதியிலுள்ள தடையே காரணமாகும்!

முதல் மந்திரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களை விசாரித்தறிந்து தக்க நடவடிக்கை எடுப்பதற்காக, ஒரு ஆய்வுக் குழுவை உடனடியாக உருவாக்க வேண்டுமென, மக்கள் சபையில், மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் செயலாளராக உள்ள எஸ். குருபாதசாமி அவர்கள், நாகபுரியில் பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:- தன்னுடைய சொந்த நன்மையைக் கருதியே தனது மந்திரி பதவியை விட்டு விலகி, ஆய்வுக் குழுவிடம் வாக்குமூலம் கொடுத்தாக வேண்டும். [illegible] அதிகாரம் தவறிய வழியில் செலுத்தப்பட்டதென்பதையும் அறவே ஒழித்துக் கட்ட வேண்டுமானால், மந்திரி சுக்லாவின் நடத்தையை விசாரித்து அறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

எழுத்து மூலம் கொடுத்துள்ள ஆதார எவிடென்சிலிருந்து, மந்திரி மீது சாட்டப்பெற்றுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையானவை என நாங்கள் எமது கட்சியில் திருப்தியடைந்துள்ளோம்.

அவர் மீது, அழுக்காறு கொண்டோ, கட்சியைக் கொண்டோ, இப்பிரச்சினையை எங்கள் கட்சி கொண்டுவரவில்லை; அதிகார பீடத்திலிருந்து காங்கிரஸ் கட்சியை விரட்டிவிட வேண்டுமென்ற நோக்கமுமல்ல. சுக்லா குற்றவாளிதான் என ஏற்பட்டாலும், காங்கிரசே பெரும்பான்மையாக இருப்பதால், அக்கட்சியைச் சார்ந்த ஒருவரே மீண்டும் முதல் மந்திரியாவார் என்பது எங்களுக்குத் தெரியும்.

ஜனநாயகம், பெரும்பான்மையினர் ஆட்சி புரிவது என்பது மட்டுமே கொண்டதல்ல. முதல் மந்திரியையும் பொறுத்து, மக்கள் சந்தேகம் கொள்வதற்குத் துளியும் இடமில்லாத, ஒளிவு மறைவற்ற நாணயமான ஆட்சியை நடத்தத் தீரவேண்டும்.

சித்திரக்குடி உழவர் மீது மிராசுதார் தடியடி தர்பார்?

பலரைப் படுகாயப்படுத்தி குடிசைகளையும் வீழ்த்தினர்

அறுவடை செய்ய மறுத்ததே காரணம்?

கொட்டமடிக்கும் சீமான்களின் அடாத செயல்!

தஞ்சாவூர், அக். 3—

பூதலூருக்கருகில் உள்ள சித்திரக்குடி கிராமத்தில் மிராசுதார்களுக்கும்—கிசான்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டுள்ளதாக செய்தி வந்துள்ளது.

அறுவடையின்போது அதிகமான கூலி வேண்டுமென விவசாயிகள் கேட்டார்களாம்; மிராசுதார்கள் தர மறுத்துவிட்டிருக்கின்றனர். உடன் விவசாயிகள் அறுவடை செய்ய முடியாதெனக் கூறி வேலை செய்ய மறுத்துவிட்டனராம்!

இதன்பேரில் மிராசுதார்களில் சிலர் தடிகளுடன் உழவர்களின் குடியிருப்பு இடத்திற்குச் சென்று அவர்களில் பலரைத் தாக்கிப் படுகாயப்படுத்தினராம்! பல குடிசைகளையும் வீழ்த்தி நாசம் விளைவித்திருக்கின்றனராம்!

பதினைந்து பேருக்கு மேல் பலத்த காயங்களுடன் திருக்காட்டுப்பள்ளி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கின்றனர்; அவர்களில் 5 பேருக்கு மிகவும் பலமான தாக்குதலாம்.

போலீசார் சுமார் 20 பேர்கள்மீது வழக்குப் பதிவு செய்துள்ளனராம்; ஆனால் அந்த 20 பேர்களும் தலைமறைவாகிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

உதவி போலீஸ் சூப்பிரண்டெண்டெண்டான ஆழ்வாரப்பன், ஆயுதந் தரித்த போலீஸ் அணிகள் இருவருடன் கிராமத்தில் முகாம் செய்துள்ளார் எனத் தெரிகிறது.

லிபியா மந்திரி

சுட்டுக் கொல்லப்பட்டார்

பெங்காசி, (லிபியா) அக் 5—

சையத் இப்ராஹிம் சாலி என்ற லிபியாவின் அரண்மனை விவகார இலாகா மந்திரி சர்க்கார் மாளிகை ஒன்றின் முன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிகிறது.

பின்னர், அரச குடும்பத்தைச் சேர்ந்த ஷரிப் முகைபதின் செனுசி என்ற இளைஞனைப் போலீசார் கைது செய்தனர்.

அரச குடும்பத்தின் இன்றைய தலைவர் முகமது இத்ரிஸ் அல் செனுசி என்ற 64 வயதுடையவர் அவர்தான் செனுசி குல மக்களின் தலைகுமாரர்; கடந்த 1951-ம் ஆண்டு டிசம்பர் 24-ந் தேதியன்று லிபியா சுதந்திர ராஜ்யத்திற்கு ஐ. நா. சுதந்திரம் வழங்கியபோது லிபியா முழுமைக்குமாக அரசர் எனப் பிரகடனப் படுத்தப்பட்டார்.

ராஜஸ்தான் காங்கிரசிற்குள் கோஷ்டிச் சண்டை!

ஒன்றுபடுத்த பல்வந்த்ராய் முயற்சி!

ஜெய்பூர், அக் 5—

ராஜஸ்தான் மாநிலத்தில் காங்கிரஸ் பல கோஷ்டிகளாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று முரண்பட்டு வேலை செய்து வருவது பற்றி ஏற்கனவே செய்திகள் வெளியாகியுள்ளன அல்லவா? அவற்றைத் தொடர்ந்து காங்கிரஸ் காரியதரிசியான பல்வந்த்ராய் மேத்தா, அந்தக் கோஷ்டிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகச் சந்தித்து, பிரிந்து கிடக்கும் அவர்களை ஒன்றுசேர்ப்பதற்காக ஒரு நாள் முழுவதும் பேச்சு வார்த்தைகள் நடத்தியிருக்கிறார்:

காங்கிரஸ் ஊழியர்கள், சட்டசபை உறுப்பினர்கள், மந்திரிகள் ஆகிய ஒவ்வொரு பிரிவினரையும் தனித்தனியாகவும் ஒன்றாகவும் சந்தித்து அவர்களிடையே நிலவும் கோஷ்டிச் சண்டையை கைவிட்டு, காங்கிரஸ் கட்சியின் பலத்தை அதிகப்படுத்தக் கேட்டுக் கொண்டாராம்.

ஜெய் நாராயண் வியாஸ், மாணிக்கலால் வர்மா என்ற காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர், ஆதித்யேந்திரா என்ற மாநில காங்கிரஸ் தலைவர், ஆகிய மூவரும் ஒன்றுகூடி, தங்களிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை பரிமாறிக் கொண்டு, அவைகளுக்கும் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும் என்றும் பல்வந்த்ராய் மேத்தா உபதேசம் செய்துள்ளார் என்று தெரிகிறது.

தங்களைக் காப்பாற்றுவதாக வாக்களிக்கும் அபேட்சகர்களுக்குத் (நம் மக்கள் மார்க்கம்)

தென் திருவாங்கூரில் வானர சேனையின் படையெடுப்பு!

காய்கறி தின்னும் குரங்கினம் 'சமைத்த மீனை'யும் சரிக்கட்டிவிடுகிறதாம்!

சிற்றூரை விட்டு வெளியேற ஆயிரக்கணக்கான மக்கள் முடிவு!

இராம தூதர்கள் சேட்டையின் எதிரொலி!

தென் திருவாங்கூர் நெய்யாற்றங்கரை தாலுக்காவிலுள்ள இரண்டு சிற்றூர்களை விட்டு வெளியேறிவிடுவதென, அங்குள்ள ஆயிரக்கணக்கான மக்கள் முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அம்முடிவிற்குக் காரணம், நூற்றுக்கணக்கான குரங்குகள் தொடர்ந்து நடத்திவரும் படையெடுப்பேயாகும்.

மீன் தின்னும் குரங்கினம்

அக்குரங்குகள், பயிர்களை அழித்துவிடுவதோடு நின்றுவிடாமல், வீடுகளுக்குள் நுழைந்து, உணவுப்பண்டங்களை எல்லாம் களவாடுகின்றனவாம்! பொங்கி வைத்துள்ள சோற்றையும் விடுவதில்லையாம்! காய்கறிகளையே உண்டு வாழும் இக்குரங்கினம், 'சமைத்த மீன்' வகைகளைக்கூட விடாமல் விழுங்கிவிடுகிறதாம்!

இந்த 'இலங்காதகனத்தின்' பலனாக, நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பட்டினி கிடக்கவேண்டியதாகிறதாம்!

தேர்தல் நிபந்தனை!

கடந்த பொதுத் தேர்தலின் போது, பாச்சாலூர், முட்டக்காடு ஆகிய இரண்டு சிற்றூர்களையும் சேர்ந்த வாக்காளர்கள், 'இராம தூதர்'களின் தாக்குதலிலிருந்துத்

திரு-தமிழர் அறப்போர் எதிரொலி

நகரசபை தலைவர் கைது!

நாகர்கோவில், அக் 5—

திருவாங்கூர் தமிழர் பகுதிகளை தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டுமென்று கோரி, சமீபத்தில் நடைபெற்ற திரு—தமிழர் அறப்போராட்டத்தில், முதல் தொண்டர் படைக்குத் தலைமை தாங்கி பணியாற்றிய நாகர்கோவில் நகரசபைத் தலைவர் அனந்தராமன் போலீசாரால் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

* * *

மேலும், இந்தப் போராட்டத்தின்போது, திரு—கொச்சி சர்க்காரின் செயல்களையும், தனது தலைவரையும், வெளிப்படையாகக் கண்டித்த திரு த. கா. காந்திரன் தலைமை அவர்களும் கூடிய சீக்கிரமே கைது செய்யப்படலாம் என்றும் தெரியவருகிறது.

இராக்கிப் படிக் கமிட்டியின் சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டதால் மத்திய சர்க்காருக்கு ஏற்பட்டுள்ள அதிகப்படிச் செலவு ஆண்டிற்கு 5 கோடி ரூபாய் ஆகும்.

885 கோடி ரூபாய் செலவு!

ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் சுமார் 885 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையில் மத்திய சர்க்காருக்கு 444.9 கோடி ரூபாய்; மாநில சர்க்கார்களின் பங்கு 439.9 கோடி ரூபாய்.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 6—10—54 புதன்

என்று தொலையுமோ?

"அவள் ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் கற்றுத் தெளிந்து பிறருக்கும் கற்றுத் தரும் — கல்விக் கடவுள் — கலைமகள் — சரசுவதி." என்ற கற்பனை நம்பி, அவள் கடாக்ஷம் பெற்றால்தான் கல்வியறிவு நமக்குக் கிடைக்கும் என்றெண்ணி, அவளது திருவுருவத்தை கண்ணாடிச்சட்டத்துள் அடைத்து கட்டிச் சூடம் கொளுத்தி, மட்டிப்பாலை வத்தியின் வாடை காட்டி, பால் சாம்பிராணிப் புகை மூட்டி, பூசையும், புனஸ்காரமும் செய்து, பக்தர்கள் விழாக் கொண்டாடுகிறார்கள்; படிக்காத தற்குறியும், பல்கலையும் பயின்ற பண்டிதரும் பங்கு பெறுகின்றனர் இந்த விழாவினில், கரைகடந்த உற்சாகத்தோடு!

"நீ செய்யும் தொழில் எல்லாம் அவன் செய்த அலுத்தனை; அவன் செய்யாத தொழிலே இல்லை; செழுத நுண்மையிலே இல்லை; கற்காத கலையே இல்லை,' என்ற பொய்யுரையை மெய்யுரை யென்றேற்று, அவரவர் செய்யும் தொழிலில் பயன்படுத்தும் தொழிற்கருவிகளை நிரப்பி, 'நெற்றிக்கிட்டு, 'கலை தேவி'யின் முன் நிறுத்தி, 'எனது தொழில் வளர, அத்தொழிலில் எனக்கு அறிவும் அனுபவமும் பெருக வாழ்த்தி அருளுவாய், அம்மையே!' என அடி பணிகிறார்கள்; — இரும்படிக்கும் உலைக்கூடத்தில் உள்ள சாதாரணத் துருத்தி முதல், விஞ்ஞானக் கலைக்கூடம் கண்ட கணக்கற்ற இயந்திரக் கருவிகளை இத் 'தொழுகை'யில் பங்கு பெறச் செய்து பக்தி ரசம் பண்ணுகிறார்கள், பக்தர்கள், இந்த சரசுவதி பூசையின் போது — அதை ஆயுத பூசை என்றும் அழைத்துக்கொண்டு!

"எல்லாம் அவன் செயல்; அவனன்றி அணுவும் அசையாது; கல்லினுள் தேரைக்கும், கருப்பையில் உயிருக்கும் உணவளித்து, உயிர் கொடுத்து, 'இப்படித்தான் உன் வாழ்வு.' என்று 'விதி'த்து, 'இத்தனை நாள் வாழ்ந்தது போதும்,' என்று 'முடிவு' கட்டி, மனிதர்தம்மையும் மற்றெல்லாவற்றையும் படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலையும் தம் விளையாட்டாகக் கொண்டவர் ஆண்டவர்," என்றெண்ணி, தம் வாழ்வு, வளம், உழைப்பு, உயரிய அறிவு அத்தனையையும் ஆண்டவனுக்கே காலமாகவும் வாழ்வளித்துக் கொண்டுவரும் இந்த நாட்டு மக்கள், கல்விக்கென ஒரு கடவுளைப் படைத்து, விழாக் கொண்டாடுகிறார்கள் என்பதில் வியப்பொன்றுமில்லைதான்!

ஆனால், எந்த நோக்கோடு இவர்கள் இந்த வழிபாடுகளை, விழாக்களை, பூசைகளை நடத்துகிறார்களோ, அந்த நோக்கம் என்றாவது எந்நாளையிலாவது நிறைவேறிற்றா; இனியுமாவது நிறைவேறுமா என்று எண்ணி, உன்னிப் பார்க்கும் அறிவை, இவர்கள் வழிபடும் அந்த ஆண்டவன் இவர்களுக்கு இன்னமும் தரவில்லை என்பதில்தான் வியப்பிருக்கிறது!

கல்வியறிவு பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் இந்தக் கடவுள் வழிபாடு என்கிறார்கள்!

கல்வியறிவு பெறவேண்டியது அவசியந்தான்; கற்றவர் மறுக்க மாட்டார், மக்கள் எல்லாம் கல்வி அறிவு பெறவேண்டும் எனும் நோக்கத்தை; ஆனால், அந்தக் கல்வியறிவைப் பெறுவதற்கு வழி என்ன? கடவுள் வழிபாடா? கண்ணாடிச் சட்டத்துள் அடைத்து வைத்திருக்கும் ஒரு படத்திற்குப் பொட்டிட்டு, பூமாலை அணிவித்து, புத்தகங்களை அதன் முன் அடுக்கி வைத்து, அவலும், பொரியும் படைத்து, பக்தி போதை பண் இசைப்பதால் அடைந்துவிடக் கூடியதா கல்வியறிவு? அப்படியானால், பள்ளிக்கூடங்கள் ஏன்? பல்கலையும் பயிற்றுவிக்கும் கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் ஏன்? பண்டிதர்கள் ஏன்?

படித்தால் மட்டும் போதாது; படித்ததை நடைமுறையில் செய்து பார்க்கும் பழக்கமும் வேண்டும் என்பதற்கான ஆராய்ச்சிக்கூடங்கள் ஏன்?

இன்னும், அவைபோன்ற எத்தனை எத்தனையோ சாதனங்கள் ஏன்?

'கல்வியறிவைக் கடவுள்தான் தர முடியும்,' என்றால் இந்த நாட்டில் ஏன் நூற்றுக்கு 80 பேர் கல்வியறிவில்லாத தற்குறிகளாய் இருக்கிறார்கள்? அந்தக் கலைக் கடவுளுக்கு, அருள் பாலிக்கும் அன்புள்ளம் இல்லையா, என்ன?

கல்வியறிவு பெறுவதற்கான வேண்டிய கல்வி அரசியின் கடாட்சத்தையே நம்பியிருப்பவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்—இந்த நாட்டில் இத்தனை பேர் கல்வியறிவு இல்லாதவர்களாக இருப்பானேன்? கல்வித்தரு கடவுள் இருந்தும், வேறு பல நாடுகளில், இத்தகைய 'இலாகாக் கடவுளர்கள்' இல்லாதிருந்தும் நூற்றுக்கு நூறு பேர் கல்வியறிவு பெற்றவர்களாக ஆக்கப்பட்டு வருகிறார்களே, அது எப்படி, என்பதை!

இலாகாவிற்கென பல கடவுளர்கள், இந்த நாட்டு மக்களின் வாழ்வில் குறுக்கிடாத முன்னர் மக்கள் வாழ்ந்தார்கள்—வளமுடன் மட்டுமல்ல வாழ்ந்தது; நல்லறிவுடனும், அந்த அறிவு முதிர்ச்சி ஊற்றுத் தரும் பெரும் பண்புடனும் வாழ்ந்தார்கள்.

அப்படி அவர்கள் வாழ்ந்த காலத்தில், அறிவுபெற அவர்கள் கையாண்ட வழி, 'சரசுவதி பூசை' கொண்டாடுவது அல்ல!

தமிழர்தம் வாழ்வு நெறி சொல்லும் வள்ளுவப் பெருந்தகை, 'யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு,' என்று, அறிவுக்கு இலக்கணம் வகுத்ததுடன், அந்த அறிவைப் பெறுவதெப்படி எனும் வழியையும் சொல்லிப் போந்தார்.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு,' என்றார்.

'ஊற்று மணலைத் தோண்டத் தோண்ட நீர் ஊற்றெடுப்பதைப் போலவே, மக்கள், பலகாலும் கற்கக், கற்கத்தான் அறிவு வளரும்,' என்று கூறியதுடன், எப்படிக் கற்க வேண்டுமென்பதையும், 'கற்க கசடற,' என்றும் திண்ணமாக விளக்கினார்.

எனவே, அறிவு வளர, கல்வி கற்க வேண்டும்; கல்வி பெறும் கூடங்கள் நாடெங்கும் தோற்றுவிக்கப்பட வேண்டும்; அப்போதுதான், மக்கள் கல்வியைக் கட்டாயமாகக் கற்பதற்கான சாதனங்களையும், வசதிகளையும் பெற்று, அவர்கள் எல்லோரும் கல்வி கற்றால்தான் அறிவு வளருமேயன்றி ஆண்டுக்கு ஒருமுறை 'சரசுவதி பூசை' கொண்டாடுவதால் வளராது; நிச்சயம் வளர முடியாது!

எனவே, இந்த நாட்டினரிடமிருந்து என்று தொலையுமோ இந்த மூடநம்பிக்கைகள், புராணத் திருவிழாக்கள்,' என்று தானே சொல்லவேண்டியுள்ளது—அறிவு பெறக்கூட ஆண்டவனை எதிர்நோக்கிப் பூசை புரியும் பக்தர்களை நோக்கி!

மலேயா அழகியை மணக்க முயற்சி!

பிரிட்டிஷ் போர்வீரர் கைது செய்யப்பட்டார்!

கோலாலம்பூர், அக். 3—

மலேயாவைச்சேர்ந்த, 32 வயதான தைசா-பின்டே-தாலிப் என்ற அழகான ஒரு பெண்மணியும், பிரிட்டனைச் சேர்ந்த படைவீரர் பிரையன் ஷார்ப்பே என்பவரும் மணப்பதிவு அலுவலகத்தில், தங்கள் கணவனும் மனைவியுமாகப் பதிவு செய்துகொள்ளச் சென்றபோது, கோலாலம்பூரிலுள்ள இராணுவ அதிகாரியால் மணமகன் ஷார்ப்பே கைது செய்யப்பட்டாராம்!

வெளிநாட்டைச் சேர்ந்த பெண்ணொருத்தியையோ, அல்லது வெளிநாட்டிலிருக்கும் பிரிட்டிஷ் பெண்ணையோ மணந்துகொள்ள வேண்டுமானால், அவளை மணந்துகொள்ள 4 மாதங்களுக்கு முன்னரே இராணுவத் தளபதியின் அனுமதி பெற வேண்டும் என்ற உத்திரவை மீறியதின் காரணமாகவே அவர் கைது செய்யப்பட்டாராம்.

அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்

அமெரிக்க கடற்படைக்காக தயாரிக்கப்படும் நான்கு அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களில் முதலாவதான, 'நாட்டிலஸ்' என்ற கப்பல் சமீபத்தில் அமெரிக்கக் கடற்படையில் சேர்க்கப்பட்டது. அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல், உலகத்திலேயே முதலாவது இதுவே!

இந்த நீர்மூழ்கிக் கப்பலைத் தயாரிக்க அமெரிக்கக் கடற்படையும், ஜெனரல் டைனமிக்ஸ் கார்ப்பரேஷனும் 28 மாதங்கள் முயற்சி செய்தன.

இந்தியத் தூதுவர்களுக்கு சொந்த மாளிகைகள்!

ரூபாய் 50 இலட்சம் செலவு!

இந்திய அரசாங்கம் தனது தூதுவர்களுக்காக, மத்திய கிழக்கு நாடுகளிலும், மேற்கத்திய நாடுகள் பலவற்றிலும், ரூ 50 லட்சம் செலவில் சொந்த மாளிகைகளை வாங்கத் திட்டமிட்டிருக்கிறது.

அங்காராவில் ஏற்கனவே நிலம் வாங்கப்பட்டுவிட்டது மாளிகை கட்டுவதற்கான வேலைகள் அண்மையில் துவங்கும்.

ரூ. 4 லட்சம் செலவில் கைரோவில் மாளிகை கட்டப்படுகிறது.

சான்பிரான்சிஸ்கோவில் தூதர் கட்சியினர் இருமாதத்தங்க நிலத்தில் ரூ. 2,86,000 செலவில் மாளிகை அமைக்கப்படும்.

காட்மாண்டுவில் பலவீடுகள் கொண்ட ஒரு வளைசயே அமைக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இந்தியத் தூதர்களுக்கு சொந்த மாளிகைகள் அமெரிக்கா, பிரிட்டன், சுவிட்சர்லாந்து, ஐப்பான், மலாயா, பாகிஸ்தான், எகிப்து, பிரான்ஸ், ஹாலந்து, ஆஸ்திரேலியா, ரங்கூன், கனடா, சீனா ஆகிய நாடுகளில் உள்ளன.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் உள்ள மேற்கு ஆப்பிரிக்காவிலிருக்கும் அக்காரா எனும் இடத்திலும் சொந்தமாளிகை அமைப்பதற்கான திட்டங்கள் இருக்கின்றனவாம்!

அரிசனங்கள் கலந்து கொள்ளாத அரிசன நாள்!

ஆசிரியர்-அதிகாரிகள் மட்டுமே கலந்த காந்தி விழா

கோதரா, அக். 5—

இரண்டு தினங்களுக்கு முன் கொண்டாடப்பெற்ற காந்தி பிறந்த தின விழாவுடன் அரிசன நாளும் கொண்டாடப்பெற்றது. அதற்கான ஊர்வலத்தில், அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர்கூட கலந்துகொள்ளாமல், தொலைவில் கும்பலாகக் கூடி, ஊர்வலத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்தனர்.

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருந்தபடி ஒரு அரிசனர், காங்கிரஸ் கொடியைப் பறக்க விடுவதாக இருந்தது. ஆனால், அரிசனங்கள் கலந்துகொள்ளாததால், ஒரு ஜாதி இந்துவே கொடி ஏற்ற வேண்டியதாயிற்று.

காந்தி விழாவிலும், ஊர்வலத்திலும் பள்ளி ஆசிரியர்களும், சிறுவர்களும், சர்க்கார் அதிகாரிகளும், சில காங்கிரஸ்காரர்களுமே கலந்துகொண்டனர். ஒன்றிரண்டு முஸ்லீம்களும் கலந்திருந்தனர்.

நியாய முறையில் குடியுரிமைச் சட்டம் இலங்கையில் அமுலாக்கப்படுகிறதா?

—— (:) ——

நாளுக்கு நாள் மக்களிடையே பீதி நிலவுகிறது!

8 லட்சம் பேரில் 1 லட்சம் பேருக்காவது குடியுரிமை கிடைக்காது?

இலங்கை வாழ் இந்தியர்கள், தாங்கள் 'இலங்கைக் குடிமக்கள்' என்று உரிமை கோரிச் செய்துகொண்ட மனுக்களில், இதுவரையிலும் நிராகரிக்கப்பட்டவைகளின் புள்ளி விவரங்கள் குறித்துப் பெரும் பீதி கொண்டு, 'இலங்கையில் குடியுரிமைச் சட்டம் நியாயமான முறையில் அமுல் செய்யப்படுகிறதா,' என்ற ஐயப்பாடு அவர்களிடையே வளம்பியுள்ளதாகத் தெரிகிறது.

சென்ற ஆண்டு இறுதியில், இப்படிச் செய்துகொண்ட மனுக்களில், 1,476 மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, 72 மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டனவாம்!

சென்ற ஆண்டு நடைபெற்ற டில்லி ஒப்பந்தத்தில், சரி சமமான அளவு மனுக்கள் ஒப்புக்கொள்ளப்பட்டும், நிராகரிக்கப்பட்டும் இலங்கை — இந்தியரை வெளியேற்றும் திட்டம் நடைபெறும் என்று கண்டிருக்கிறது; ஆனால் இப்போது கிடைத்துள்ள புள்ளி விவரப்படி, 20 மனுக்களுக்கு ஒரு மனு மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மீதி 19 மனுக்களும் நிராகரிக்கப்பட்டு வருகிறது என்ற நிலையிலிருக்கிறது. ஆனால் கடந்த ஜூலைத் திங்களில் இதே விகிதம், 8-க்கு 1 என்றுதான் இருந்தது.

டில்லி ஒப்பந்தம் நடைபெற்ற பின்பே, நிலைமை மிக மோசமாகியிருக்கிறது. டில்லி ஒப்பந்தப்படி குடியுரிமைச் சட்டத்தை நேர்மையுடனும், நியாயத்துடனும் அமுல் நடத்த இலங்கை ஒத்துக்கொண்டபோதிலும், இப்போதைய நிலையின் அந்த ஒப்பந்தப்படி அமுல் நடந்து வருகிறதா என்பதே ஒரு பெரிய சந்தேகமாகிவிட்டது!

மனுக்களின் 2 ஆண்டுகளில் பைசல் செய்து விடுவதாக வாக்களித்திருந்தும் கூட இதுவரையில், ஆமை வேகத்திலேதான் சென்றுகொண்டிருக்கிறது!

இதுகாறும் தாக்கல் செய்யப்பட்ட 2,87,000 மனுக்களில் இன்று வரையிலும் சுமார் 80,286 மனுக்கள்தான் பரிசீலிக்கப்பட்டு முடிவு தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஆமை நடையிலேயே அது சென்றுகொண்டிருந்தால், இலங்கை—இந்தியர்களின் குடியுரிமை மனுக்களைப் பரிசீலிக்க மட்டும் குறைந்தது 11 ஆண்டுகள் பிடிக்குமாம்!

தண்ணீர் வசதிக்கு ரூ. 40 லட்சம் கடன்!

இந்திய சர்க்கார் திட்டக் குழுவினர், கோவை நகரசபையின் தண்ணீர் வசதிக்கு ரூ 40 லட்சமும், சாக்கடைத் திட்டத்துக்கு ரூ 8 லட்சமும் கடன் கொடுக்கலாம் என்று திட்டமிட்டு அதை அங்கீகரித்துள்ளதாகத் தெரிகிறது. இந்திய சர்க்காரின் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, இதற்கான பணம் கடனாகக் கொடுக்கப்படும் என்றும், அடுத்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் கடனுதவி கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் மின்சக்தி நிலை மோசமாகிறது!

'துரிதமான' திட்டங்கள் தேவை

உலகத்தின் 'சக்தி பஞ்சம்' பற்றி இந்திய விஞ்ஞானி

"இந்தியாவின் 'சக்தி' நிலைமை வெகு நெருக்கடியாக இருக்கிறது; 'சக்தி' நிலையை இன்னும் உயர்த்த, இந்தியா தெர்மல், ஜலமின்சார உற்பத்தி நிலையங்களை நிறுவும் வேலையில் அதிகமதிகமாக ஈடுபட வேண்டும்; அதோடு நின்றுவிடாமல், அணுசக்தி அபிவிருத்திக்கான நீண்டகாலத் திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும்,"

என்று, கல்கத்தாவில், மந்திரிகள், மக்கள்சபை உறுப்பினர் ஆகியோர் முன்னிலையில், பிரபல இந்திய விஞ்ஞானி டாக்டர் மெகானத் சஹா கூறியிருக்கிறார்.

மேலும் அவர்களிடம் பேசுகையில், "இன்றைய உலகம், 'சக்தி'ப் பஞ்சத்தின் பிடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது; சில நாடுகளில் இந்தப் பஞ்சம் அதிகமாகவும், சில நாடுகளில் இந்தப் பஞ்சம் விரைவில் நெருங்கக்கூடிய நிலையிலும் இருக்கிறது." என்றார்.

இதற்குக் காரணம் காட்டிப் பேசுகையில், உலகில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள்ளாக நிலக்கரி கிடைப்பதே இதற்குக் காரணம்; இதைப் போக்க, அணுசக்தி, அபிவிருத்தி அடைந்தால் தான் முடியும்; இன்றைய நாடுகளில், மின்சார சக்திகளில் 90 சதவிகிதமும் நிலக்கரியை உபயோகித்துத்தான் உண்டாக்கப்படுகிறதே தவிர, மீதி 10 சதவிகிதம்தான் தண்ணீர் மூலம் உற்பத்தி செய்ய முடிகிறது என்று குறிப்பிட்டார்.

"தொழிலிலேயே புரட்சி ஏற்படுத்திய பிரிட்டனில்கூட ஆண்டு ஒன்றுக்கு சுமார் 200 இலட்சம் டன் நிலக்கரி பற்றாக் குறையாக இருக்கிறது; மற்றும் பிரான்ஸ் இத்தாலி, நார்வே, ஸ்விட்சர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் மிகக் குறைந்த அளவு நிலக்கரிதான் கிடைக்கின்றது; அமெரிக்காவைக்கூட இன்னும் இரண்டு நூற்றாண்டுகளுக்குள் நிலக்கரிப் பஞ்சம் பற்றிக் கொள்ளும்; தொழிலிலே இன்னும் பூரண அபிவிருத்தியடையாத நாடுகளில்—சீனாவில், 1,60,000 கோடி டன் நிலக்கரி இருக்கிறது; ஆனால், இந்தியாவிலோ சுமார் 6000 கோடி டன் நிலக்கரிதான் (ரிசர்வ்) ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறது," என்று, அவர், உலகிலுள்ள நிலக்கரி வளங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

தொழில் நிலை பற்றி இந்தியாவையும் சீனாவையும் ஒப்பிட்டுக் கூறுகையில், இன்னும் சில ஆண்டுகளில் சீனா பூரணமான தொழில் வளர்ச்சியடைந்த ஒரு நாடாக மாறும் என்பது நிச்சயம்; ஆனால் இந்தியாவிலோ அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியத் தொழில் உற்பத்தியை 10 மடங்கு அதிகப்படுத்தினால்கூட, இந்தியாவில் ஒதுக்கப்பட்டிருக்கும் (ரிசர்வ்) நிலக்கரி 50 ஆண்டுகளுக்குள் கரைந்துவிடும் என்றும் குறிப்பிட்டார்.

கவிமணி மறைவு

சென்னை மாணவர் மன்றம் வருத்தம்

சிறந்த கவிஞர்கள் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை தான் தோன்றுவார்கள். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களில் கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள் ஒப்புயர்வற்றவராய் விளங்கினார் தமிழ்நாட்டு இளங் குழந்தைகளும் அவரை அறியும்; அறிவு நலம் சான்ற புலவர்களும் அவரை உணர்வர். நம்நாட்டு உயர்ந்த கவிஞர்களெல்லாம் அறிவாற்றல் நிறைந்த பெரியவர்கட்காகவே பாடினர், எழுதினர் நம் கவிமணி அவர்கள், இன்று இளைஞர்களாக இருப்பவரே எதிர்காலக் குடிமக்கள் என்பதை உளங்கொண்டு குழந்தைக் குலத்தின் நல்வாழ்வுக்காகப் பாடினார். அவர் குழந்தைக் கவிஞர் மட்டுமல்லர். அவர் இயற்றிய ஆசிய ஜோதி ஒப்பற்ற சாதனை. இனிமையும், எளிமையும் வாய்ந்த அந்நூல் ஒப்பற்ற கவிநலம் வாய்ந்தது; 'கவிமணி' என்னும் பட்டம் தகும் தகும் என பறை சாற்றுவது.

நாஞ்சில் நாடு தமிழருக்கே சொந்தம் என்பதை நிலைநாட்டும் கிளர்ச்சியாகக் கவிமணி அங்கு வாழ்ந்து வந்தனர். அந்த மலை சாய்ந்துவிட்டது என்ற அவலச் செய்தி கேட்டு இன்று தமிழ் நாடு முழுதும் வருந்துகின்றது.

தமிழ்த் தாயின் தலைசிறந்த மக்களில் ஒருவராக விளங்கிய கவிமணி அவர்களின் மறைவு தமிழருக்கு—தமிழ் நாட்டிற்கு பேரிழப்பாகும் என்பது மட்டு மல்லாமல் எதிர்கால இளைஞர் உலகத்துக்குப் பேரிழப்பாகும்.

முதிர்ந்து நிறைந்த அனுபவச் சாலையாக விளங்கினார் அவர். அவருடைய அரிய அனுபவங்களை இளைஞர் நன்மைக்கென வாரி வழங்கி வந்தார். முதுமையிலும், நோய்வாய்ப்பட்டிருந்த போதும் தளராமல் பணியாற்றினார். நாஞ்சில்நாட்டுப் போராட்டத்துக்கு அவர் தந்த ஆதரவு மிகப் பெரிதாகும். அந்த ஆதரவை இழந்துவிட்டோமே என்று அந்தத் தலைவர்கள் மிகவும் வருந்துகின்றனர்.

இங்ஙனம் ஒவ்வொரு துறையிலும் கவிமணியின் பிரிவு ஈடு செய்ய முடியாததாக உள்ளது. தமிழ் நாட்டின் நல்வாழ்வு இன்மையாலேயே இத்தகைய தலைசிறந்த சான்றோர்கள் பலர் மறைவுக்குக் காரணமோ என்று கருத வேண்டியுள்ளது; எனினும், தமிழ் மக்கள், உணர்ச்சி மட்டும் வாய்க்கப் பெற்றவர்கள் அல்லர்; செயலாற்றும் திறமையும் கொண்டவர் என்பதை நாடு அறியும் வகையில் மறைந்த பெரியாரின் அடிச் சுவட்டைப் பின்பற்றி உழைத்து அவர் கனவை நனவாக்குவதே நம் கடமையாகும்.

மறைந்த பெரியார் அவர்கட்கு மன்றத்தாரின் நன்றியும் வணக்கமும் தெரிவிப்பதுடன், அவர் பிரிவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கும், சுற்றத்தாருக்கும், நண்பர்கட்கும் மாணவர் மன்றச் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பாண்டியன் நினைவுப் படிப்பகம்

சிவகங்கை, மேலரத வீதி 7-வது வார்டில் மேற்படி படிப்பகம் நிறுவப்பட்டு, 12—9—54 அன்று திறப்பு விழா நடத்தப்பட்டது. தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமெனவும், கவர்னர் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமெனவும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

படிப்பகத்திற்கு, சு. தர்மராசன் செயலாளராகவும், முரு. சுப்பிரமணியன் துணைச் செயலாளராகவும், முத்துராமன் பொருளாளராகவும், நா. இராமச்சந்திரன் மேற்பார்வையாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மே. நியூகினியா பிரச்சினை

டச்சுக்காரர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்

இந்தோனேஷியாவில் உள்ள முக்கியமானவர்களைக் கொன்று குவித்திட, சில பயங்கரவாதிகள் முயற்சிப்பதாக இந்தோனேஷிய அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்தோனேஷியாவில் உள்ள டச்சுக்காரர்கள், மேற்கு நியூகினியாவை இந்தோனேஷியாவுடன் இணைத்துவிடுமாறு நெதர்லாந்து அரசாங்கத்தைத் தூண்ட வேண்டும் என்றும், இல்லாவிடில் டச்சுக்காரர்களில் முக்கியமானவர்கள் கொல்லப்படுவர் என்றும் அந்தப் பயங்கரவாதிகள் கூறியிருப்பதாகத் தகவல் வந்துள்ளது

இந்தோனேஷியாவில் உள்ள பல்வேறு நகரங்களில் இந்தப் பயங்கரவாதிகள் எதிர்ப்பு இயக்கங்களை உருவாக்கி வருகின்றனர் என்று தெரிகிறது என்றும், பொது மக்கள் இத்தகைய சட்ட விரோதமான இயக்கத்தவரின் வார்த்தைகளுக்குச் செவி சாய்த்துவிடக் கூடாது என்றும் அந்த அதிகாரி எச்சரித்துள்ளார்

சர்க்கரை உற்பத்தி

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய மானியம்!

இந்தியாவில் 1953—54-ல், 12 முதல் 13 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகக்கூடும் என மதிப்பிடப்பட்டிருந்தது; ஆனால், தேவையோ 18 லட்சம் டன்களாயிருந்ததினால் 4 முதல் 5 லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி செய்யவேண்டியிருந்தது.

1954—55-ல், 3 லட்சத்து 8 ஆயிரம் டன் சர்க்கரை வாங்க 25 கோடி 84 லட்சம் ரூபாய் வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது.

பீகார், உத்தர பிரதேசம் ஆகிய இடங்களில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களினால் இந்த ஆண்டில் உற்பத்தி 10 லட்சத்து 2 ஆயிரம் டன்னுக்கு மேலிருக்காது என்று முடிவாகியது; அதே நேரத்தில் தேவையும் உயர்ந்துவிட்டிருக்கிறது; உற்பத்திக் குறைவையும், தேவையின் அதிகரிப்பையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது இறக்குமதி செய்யவேண்டுமென முடிவாகியிருந்த 3 லட்சத்து 8 ஆயிரம் டன் சர்க்கரைக்குப் பதில், 6 லட்சத்து 9 ஆயிரம்டன் சர்க்கரை இறக்குமதி செய்யப்பட வேண்டியதாயிற்று. இதனால் அதிகச் செலவாகும் தொகை 26 கோடி 82 லட்சம் ரூபாயென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தகவல்கள் உபமானியக் கோரிக்கை விவாதம் மக்கள் சபையில் விவாதத்திற்கு வந்த போது வெளியிடப்பட்டன.

தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க திட்டங்கள்

1 கோடி ரூபாய் செலவிடப்படும்

இந்தியாவில் தேங்காய் உற்பத்தியை அதிகமாக்கும் பொருட்டு 1 கோடி பெறுமான அபிவிருத்தித் திட்டங்களை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு இந்திய அரசாங்க மத்திய தேங்காய் குழு ஒப்புதல் தந்திருக்கிறதாகத் தெரிகிறது.

குழுவின் 20-வது கூட்டத்தில் இம்முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் உபதலைவரான கே. ஆர். டாமில் என்பவர் தலைமை தாங்கினார்.

இத்திட்டங்களின்படி பல குறுகிய கால திட்டங்களும், தேங்காய் ஆராய்ச்சிக் கழகங்கள் நிறுவுவதும் உள்ளடங்கியுள்ளன.

திரு—கொச்சியில் இரண்டு, சென்னையில் ஒன்பது, மைசூரில் நான்கு, ஆந்திராவில் மூன்று, பம்பாயில் ஐந்து, ஒரிசாவில் மூன்று ஆகமொத்தம் இருபத்தி ஆறு கூட்டுறவு தேங்காய் விற்பனைச் சங்கங்களை அமைப்பதற்கும் திட்டம் வழி செய்யுமெனத் தெரிகிறது.

சாத்தனூர் அணைத் திட்டம்

வட. ஆ. மாவட்டத்தை செழிப்புறச் செய்யும்

16 700 ஏகரா புதிய நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்படும்

திருவண்ணாமலைக்குச் சுமார் 20 மைல் தூரத்தில் உள்ள பொன்னியாற்றங்கரையில் கட்ட ஏற்பாடாயிருக்கும் சாத்தனூர் அணைத் திட்டத்தை, சனிக்கிழமையன்று, சென்னை முதல் அமைச்சர் காமராசர் ஆரம்பித்து வைத்தார்.

இந்த ஜில்லாவிலேயே முதல் முதல் அமைக்கப்படும் பெரிய நீர்த்தேக்கம் என்கிற அளவுக்கு வட ஆற்காடு மாவட்டத்தின் வரலாற்றிலே இது ஒரு மகத்தான காரியமாகும்.

இந்த அணையின் நீளம் சுமார் 3,125 அடி. இதில் 1,949 அடிகள் மண்ணாலும், மீதியுள்ள 1,176 அடிகள் கற்களாலும் கட்டப்பட்டதாகும்.

அணையின் வலது கைப்புறத்தில் 1,262 அடி நீளமுள்ள தடுப்பு அணை அமைக்கப்படும்.

இந்தச் சிறிய தடுப்பு அணையின் இடதுபுறத்திலிருந்து 22 மைல் நீளமான ஒரு கால்வாய் வெட்டப்படும்.

இந்தத் தண்ணீர் பாசனம் பிரதேசத்திற்கு மேற்கிலும், தெற்கிலும் பொன்னியாறு நதியும், வடக்கில் துரிஞ்சல் ஆறும் கிழக்கில் மணலூர்பேட்டை—திருவண்ணாமலை சாலையும் எல்லைகளாகும்.

மேலும் இந்தப் பாசனப் பிரதேசங்களை, வட ஆற்காடு மாவட்ட, செங்கம், திருவண்ணாமலை தாலுக்காப் பகுதிகளும், தென்ஆற்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் பகுதியைச் சேர்ந்த பிரதேசங்களும் அடங்கும்.

இந்தக் கால்வாயினால், ஏற்கனவே உள்ளது போக, மேலும் 20,000 ஏகரா புதிய நிலங்களுக்குத் தண்ணீர் வசதி கிடைக்கும்; இந்த 20,000 ஏகரா நிலங்களில் 3 291 ஏகராநன்செய்யும்,10,709 ஏகரா நன்செய்யும் அடங்கும்; செங்கம் தா[illegible] சுமார் 6 800 ஏக்கரா நிலங்களும், திருவண்ணாமலை தாலுகாவில் 8 500 ஏகரா நிலங்களும், திருக்கோயிலூர் தாலுகாவில் 4,700 ஏகரா நிலங்களும் பாசன வசதி பெறும்.

இதன் விளைவாக ஆண்டு தோறும் சுமார் 8,000 டன் அரிசி கூடுதல் உற்பத்தியாகும் என்று தெரிகிறது.

ரூ. 268 லட்சம் செலவில், சுமார் 8½ ஆண்டுக் காலத்தில் முடிக்க இத்திட்டம் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

இத்திட்டம் முடிவடைந்தவுடனே புதிய சாகுபடிக்காக சுமார் 16,700 ஏகரா நிலங்கள் கொண்டுவரப்படும்.

பிற்போக்கான நிலையிலிருக்கும் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள செங்கம், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளுக்கு இத்திட்டம் மிகவும் பயனளிக்கும்.

மற்ற திட்டங்களைப் போலல்லாமல், தண்ணீர் தேக்கம் நிற்கும் இடம் வெறும் காட்டுப் பிரதேசமாயிருப்பதால் நஷ்டஈடு தந்து நிலத்தை வாங்க வேண்டுமெனும் சிரமமும் எதுவுமில்லாதது இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் என்றும் எடுத்துச் சொல்லலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

★

கேள்விகள்:

1 ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகைகளில் இதுவரை பாதிக்கு மேல் செலவு செய்துள்ள மாநிலங்கள் யாவை?
   (அ) சென்னை;
   (ஆ) பம்பாய்;
   (இ) உத்திர பிரதேசம்.
2 : சாமானியர்கள், தங்கள் வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்ள உதவிவரும் சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 1954 அக்டோபர் 2-ந் தேதியுடன் எவ்வளவு ஆண்டுகள் பூர்த்தி ஆகின்றன?
   (அ) ஒரு ஆண்டு;
   (ஆ) மூன்று ஆண்டு;
   (இ) ஐந்து ஆண்டு;
3. போர்க் கருவிகள் மற்றும் விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் இராணுவ அதிகாரிகளுக்கு 18 மாத கால ஆதாரப் பயிற்சியளிப்பதற்காக, 1953 அக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி வகுப்புகள் எந்த இடத்தில் நடத்தப்பட்டு வருகின்றன?
   (அ) டேராடூன்;
   (ஆ) கிர்க்கி;
   (இ) ஜபல்பூர்.
4. வேலை வாய்ப்புக்களை அதிகப்படுத்துவதற்காகவும் ஐந்தாண்டுத் திட்டச் செலவுத் தொகையில் 1953 அக்டோபர் மாதத்தில் அதிகப்படியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட தொகை மட்டும் தொகை எவ்வளவு?
   (அ) 50 கோடி ரூபாய்;
   (ஆ) 100 கோடி ரூபாய்;
   (இ) 175 கோடி ரூபாய்.

விடைகள்:

1: (எல்லா விடைகளும் சரி) 2 (இ); 3. (ஆ); 4 (இ).

சொற்பயிற்சிக் கூட்டம்

3—10—54 மாலை மாயூரம்—கூறை நாடு கடாரக விலாஸ் தரிசு மிக்ஸில், தோழர் இரா. ஜோசப் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில், "நம்மாலும் ஆகும்" எனும் பொருள் பற்றி, தோழர்கள்: கே. என் சண்முகம், என். மீனாட்சிசுந்தரம், வி. சங்கையன் கே. என். சௌந்தரராசன், என். நடராசன், என். பிட்டப்பா ஆகியோர் பேசினர்.

வேண்டுகோள்

பு. ஆதிவராக நல்லூரில் உள்ள கிராமிய மக்கள் அறிவு வளர்ச்சிக்காக 'வள்ளுவர் படிப்பகம்' ஒன்று நிறுவப்பட்டுள்ளது நமது கிராமத் தோழர்கள் இங்கு வந்து பயன்பெற பொதுமக்களும் புத்தகங்களை அனுப்பி உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகவரி :— சு. இலிங்க கோவிந்தன், பொதுச் செயலாளர், 'வள்ளுவர் படிப்பகம்', பு. ஆதிவராக நல்லூர், குமாரமங்கலம் அஞ்சல், தென்னார்க்காடு மாவட்டம்.

பிறப்பு

சென்னை 4-வது வட்டத்தைச் சேர்ந்த தோழர் எம். பாண்டுரங்கன் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் சாவித்திரி அம்மையாருக்கு 30—9—54-ல் ஓர் பெண் மகவு பிறந்தது; தாயும் சேயும் நலம். தோழர் க. முத்துச்செழியன் அவர்கள் குழந்தைக்கு 'மாலதி' எனப் பெயரிட்டார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது — வாழ்த்தி பெற்றோரும் — நன்றியுடையோம் பொறுப்பாளர்.

இலங்கை இந்தியர் பிரச்சினையை இந்திய அரசாங்கம் அசட்டை செய்கிறது

தொண்டமான் தரும் தகவல்

“இலங்கையில் வசிக்கும் இந்தியர்களில் ‘வாக்குரிமை’ வைத்திருப்பவர்களில் 25 சதவிகிதத்தினரை இந்தியாவுக்குத் திரும்பவும் அழைத்துக் கொள்வது என்று இந்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பதானது, அப்படித் திரும்ப தாய்நாடு வருபவர்களின் அபாயங்களை அரசாங்கம் உணரவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. தாய்நாடு திரும்பும் இலங்கை இந்தியர்களால், அவர்களை நம்பி சென்னை மாநிலத்தில் பல பகுதிகளிலும் வாழ்பவர்கள், எவ்வளவு பாதிக்கப்படுவோர்கள் என்பதையும் இந்திய அரசாங்கம் எண்ணிப்பார்த்ததாகத் தெரியவில்லை;

“வெளியேற்றப்படுகிற ஒவ்வொரு இலங்கை இந்தியரையும் நம்பி தாயகத்தில் வாழ்பவர்கள் குறைந்தது 5 பேராவது இருப்பார்கள்; அதனால் மொத்தம் பாதிக்கப்படுபவர்கள் சென்னை மாநிலத்தில் சுமார் 1,25,000 பேர்களாவர்.

“திரும்ப அனுப்பப்படுகிற ‘வாக்குரிமை’ வைத்திருக்கும் இலங்கை இந்தியருக்கு நஷ்ட ஈடு போன்றவை தருவது பற்றி இலங்கை அரசாங்கமும், இன்ன பிறரும் எந்த விதக் கவனமும் செலுத்தியதாகக் காணோம்; இலங்கை அரசாங்கம்தான் செய்யவில்லை என்றால், இந்திய அரசாங்கமாவது, இந்தியாவிற்குள் ஏற்றுக் கொள்வது என்ற முடிவுக்கு வருமுன்னால், வரவிருப்பவர்களுக்கு அன்னாரது தெரிய வருகிற நிலையான வாழ்வு தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமே என்ற பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து காரியமாற்றுகிறார்களா என்றால் அதுவும் இல்லை!”

—இவ்வாறு இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவரான தொண்டமான், டெல்லி செல்லும் வழியில் சென்னையில் தங்கி பலருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபோது கருத்தறிவித்தார்.

நிறவெறிக் கொடுமை!

‘நீக்ரோவர்’ ஆத்தப்படும் அநீதி!

தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஜோகன்ஸ்பர்க் என்னுமிடத்தில் வெள்ளையர்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள சேரிவாழ் கறுப்பர்கள், அந்தப் பகுதிகளிலிருந்து வேறு இடத்துக்கு அப்புறப்படுத்தப்படவேண்டுமென்றும் அதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றும், இதன் காரணமாக, சுமார் 50 ஆயிரம் கறுப்பர்கள் தங்கள் வீடுகளையும், நிலங்களையும் இழக்க நேரிடும் என்றும் தெரிய வருகிறது.

இவ்வாறு அப்புறப்படுத்தப்படுபவர்களுக்கு 11 மைல்களுக்கப்பால் குடியிருப்பு வசதி செய்து தர கறுப்பர்கள் விவகார இலாகா மந்திரி உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

சோவியத் குரல் ஒலிக்கிறது!

“தன்னுடைய வஞ்சகத்தைத் தீர்த்துக்கொள்ள ஜெர்மானியருக்கு வசதி செய்து கொடுப்பதற்காகத்தான் மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவதில் அமெரிக்கா தீவிரமாகக் கருத்துச் செலுத்தியுள்ளது; அது மட்டுமல்லாமல், இந்த லண்டன் மகாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்துக்கும் புத்துயிரளித்து, மேற்கு ஜெர்மனியையும், இத்தாலியையும் அதில் இழுத்துக்கொண்டதில், பிரிட்டன் வெளிநாட்டு ராஜதந்திரமும் வெற்றி அடைந்துள்ளது,” என்று, மாஸ்கோ ரேடியோ நிலையம், அறிவித்துள்ளது.

“மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் திட்டத்தில், 9-தேச மகாநாட்டின் முடிவு ‘வெட்கக் கேடானது’ என்றும், ‘ஹைட்ரோ திட்டத்திற்கு (இ. டி. சி) புத்துயிரளிக்கவே இது நிறைவேற்றப்பட்டிருக்கிறது,” என்றும் அது குறிப்பிட்டது.

★

“லண்டன் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், உறுதியளிக்க ஜெர்மனியின் ஆயுதம் தடைப் பெருக்கத்தைத் தடுக்காது — மிக்க முக்கியமான உண்மையானது, ஜெர்மனியின் இராணுவ பலம் மீண்டும் அதிகரிப்பதின் மூலம் லண்டன் மகாநாடு, ஐரோப்பிய நாடுகளுடைய சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தை ஏற்படுத்தி விட்டது,” என்று, சோவியத்தின் செய்தி நிறுவனமான ‘டாஸ்’ அறிவித்

பிரெஞ்சு மாது

பரிதாப மரணம்!

கோபன்ஹேகன், அக் 4—

ஆமங்கு பெயர் என்ற 44 வயதுடைய மாது, ஒரு புதிய உலக ‘சாதனை’ நிறுவும் நோக்கத்துடன் பாராசூட் உதவியுடன் ஒன்றில் பறந்து செல்லுகையில் டென்மார்க் கடற்கரைக்கு அப்பால் கடலுள் மூழ்கியதில் மரணமடைந்தார்.

கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்களால் அந்த அம்மையாரின் உடலம் கரை சேர்க்கப்பட்டது.

சேற்று மாது பிரான்சில் இருந்து புறப்பட்ட அந்த அம்மையார், இதுவரை சுமார் 220 முறைகள் வானில் பறந்திருக்கிறார்களாம்.

தென் திருவாங்···

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் வாக்களிப்போம் என எச்சரித்தனர்! போட்டியிட்ட அபேட்சகர்களும், வானர சேனையின் படையெடுப்பை ஒழித்துக்கட்டி, வாக்காளர்களைக் காத்து ரட்சிப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள்!

சுட்டுக் கொல்!

திரு—கொச்சி சட்ட சபை கூட்டத்தில், பி. சோ. கட்சி உறுப்பினரான விஸ்வாம்பரன் அவர்கள், இந்த உண்மையை முதல் மந்திரியிடம் எடுத்துரைத்தார்.

மக்களுக்குக் கேடு விளைவித்து வரும் ‘இராம தூதர்’களை சுட்டுக் கொல்லவேண்டும் அல்லது வலை போட்டுப் பிடித்துத் தொலைக்க வேண்டும் என யோசனையும் கூறியுள்ளார்.

குழந்தைகளுக்கான சினிமாப் படங்கள்

மத்திய அரசாங்கம் தயாரிக்கும்!

மைசூர், அக் 5—

மத்திய அரசாங்கம் குழந்தைகளுக்கான கலாச்சார சினிமாக் கழகம் ஒன்றை நிறுவ முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

அந்த மத்திய கழகத்தின் தலைமை நிலையம் டெல்லியிலும், எல்லா மாநிலங்களிலும் அக்கழகத்திற்கு கிளைகளும் இருக்கும் என்றும் தெரியவருகிறது.

கழகத்தின் மத்தியக் குழு, குழந்தைகளுக்கான படங்களைத் தேர்ந்தெடுத்து வெளியிடுவதுடன் நல்ல படங்களுக்கும் பரிசுகளும் வழங்குமாம்.

குழந்தைகளுக்குத் தேவையான, குழந்தை வளர்ச்சிக்கு உதவக் கூடிய படங்களைத் தயாரிப்பதற்கு, மத்தியக் குழுவே பண உதவியும் செய்யுமாம்.

கல்வி, செய்தி அறிவிப்பு, நிதி ஆகிய மந்திரிகளின் பிரதிநிதிகளும், இன்னும், சமூதாய நலவோர்டு, சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், இன்னும் மூன்று சமூக சேவை புரிபவர்கள் ஆகியோரும் அந்த மத்திய குழுவில் இடம் பெறுவர் என்று தெரிகிறது.

இலங்கைத் தூதுவர் தேசாய்

விலகுவது உறுதி!

பம்பாய், அக். 5—

இலங்கையில் இந்தியத் தூதுவராக இருக்கும் சி. சி. தேசாய், தான், இலங்கைத் தூதுவர் பதவியை விட்டு விலகுவது உறுதிதான் என்றும், அக்டோபர் கடைசியிலோ அல்லது நவம்பர் முதல் வாரத்திலோ தமது பதவியை விட்டு விலகிவிடக் கூடும் என்றும் டெல்லி செல்லும் வழியில் இங்கு கூறினார்.

தனக்குப் பிறகு யார் இலங்கையில் தூதுவராகக் கூடும் என்பது பற்றியோ அல்லது, தான் வேறு எங்கு எந்தப் பதவியை ஏற்கவேண்டியிருக்கும் என்பது பற்றியோ தனக்கு எதும் தெரியாது என்று அவர் கூறினார்.

நிலம் பறிமுதல்!

கைரோ, அக். 5—

எகிப்தின் சுதேசிகள் தலைவரான ஜெனரல் நகீப் பாட்ஷாவுக்குச் சொந்தமான சுமார் 31 ஏகர நிலங்களும், எகிப்து சர்க்காரால் பறிமுதல் செய்யப்பட்டது என்று தெரிய வருகிறது.

மாஜிஸ்திரேட் ஆணையின்றி சட்டசபை உறுப்பினர் சிறையில்!

சர்க்கார் வழக்கறிஞர் காட்டிய கள்ள உத்தரவு!

அக்கள்ள உத்தரவைத் தீட்டியதோ நீதிமன்ற ரிஜிஸ்திரார்!

உத்திரப் பிரதேச சட்ட சபை உரிமை காப்புக் குழுவின் கண்டுபிடிப்பு

லக்னோ, அக் 5—

தாமே உருவாக்கிய கள்ள உத்திரவை, உத்திரப் பிரதேச சட்ட சபை உரிமைக் குழுவிடம் கொடுத்தும், சாட்சியம் கூற வந்தவர்களை பொய் கூறுமாறு முயன்றும் இருப்பதாக கோரக்பூரிலுள்ள சர்க்கார் துணை வழக்கறிஞர் மீது குற்றஞ் சுமத்தி, அந்த அதிகாரியை சட்ட சபை முன் கொணர்ந்து நிறுத்தி கண்டிக்கப்பட வேண்டுமெனக் கோரி, உத்திரப் பிரதேச சட்ட சபை உரிமைக் காப்புக் குழு, அறிக்கை ஒன்றை சட்ட சபையில் வழங்கி இருக்கிறது.

சென்ற பிப்ரவரி மாதத்தில் டெய்சாவில் நடைபெற்ற கரும்பு உற்பத்தியாளர் அறப்போரின் போது, அறப்போரில் கலந்து கொண்ட சட்டசபை உறுப்பினரான செய்ண்டா பங்கேற்றுக் கொண்ட மனுவினால், இவ்வழக்கு உருவாகி இருக்கிறது. பிப்ரவரி 21-ந் தேதியிலிருந்து 27-ந் தேதிவரை, சட்டப்படி இரண்டாவது உத்திரவு இல்லாமல் சிறையில் தொடர்ந்து அடைத்து வைத்திருந்தது சட்டத்திற்கு புறம்பானது எனவும், கவர்னருக்கும், சட்டசபை தலைவருக்கும், முதல் மந்திரிக்கும் தாம் சிறையிலிருந்து அனுப்பிய தந்திச் செய்தியை சிறை அதிகாரிகள் நிறுத்தி வைத்துவிட்டதாலும், தம்மைப்பற்றி பொய்யானக் குற்றச்சாட்டுகளை சபைத் தலைவருக்குக் கூறியுள்ளதாகவும், அம் மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செய்சா அதிகாரிகளின் இந்த அளவுகடந்த செயலினால், சட்ட சபை வரவு—செலவு திட்டக் கூட்டத்தில் தம்மால் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது எனவும், அவ்வுறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

‘சட்டசபை உறுப்பினரான செய்ண்டா சிங்கை சிறையிலேயே தொடர்ந்து வைத்திருக்கும் கோரக்பூர் மாவட்டச் சிறை அதிகாரிக்கு அனுப்பிய இரண்டாவது உத்தரவு, செய்சா நீதிமன்ற முன்னாள் ரிஜிஸ்திரரான பஜ்லூர் ரகிமானின் கள்ளச் செயலாகும்; ஆனால் ரகிமான், குழுவின் விசாரணை வெற்றிக்கு பல வகையிலும் துணை செய்திருக்கிறார்; எனவே, அவர் மன்னிக்கப்பட வேண்டுமென குழு சிபாரிசு செய்கிறது?

மேற்கண்டவாறு சட்டசபை உரிமை காப்புக் குழு, தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

சர்க்கார் துணை வழக்கறிஞரான லட்சுமி நாராயண மல்ஹோத்ரா குற்றவாளிதான் எனவும், அவர் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமெனவும், அக்குழு குறிப்பிட்டிருக்கிறது.

உரிமை காப்புக் குழுவின் முன் சாட்சியமளித்த, செய்சா மாவட்ட மாஜிஸ்திரேட் அழைக்கப்பட வேண்டுமென, செய்ண்டா சிங் கொடுத்த கோரிக்கையை, அது அவசியமில்லை என குழு ஒதுக்கி விட்டது. பின்னர் அதே உறுப்பினர், வழக்கை வாபஸ் பெற அனுமதிக்க வேண்டுமென உரிமை காப்புக் குழுவிடம் விண்ணப்பித்துக்கொண்டதற்கு, குழு சட்ட உரிமைக்கே பாதகமேற்பட்டு இருப்பதால், உறுப்பினர் வேண்டுகோளுக்கு இணங்க முடியாது என காப்புக் குழு அறிவித்துவிட்டது.

கோயில் வெளிப்புறத்தைச் சுற்றிவரலாம்; உட்புறத்தில் கால் வைக்கவும் கூடாது!

குலதெய்வக் கோயிலில் நுழையவும் அரிசனங்களுக்குத் தடை

ஐந்நூறு ஆண்டு அக்கிரமம் அழிக்கப்பட்டது

இராஜகோட்டிலுள்ள வாங்கநேர் என்ற சிற்றூர்க் கருகாமையில் ஜடேஸ்வரர் ஆலயம் இருந்து வருகிறது; அது, அரிசன வகுப்பினரின் குலதெய்வமாம்; ஆனால், குலதெய்வத்தின் கோயிலுக்குள் நுழையவும் அரிசனங்களுக்கு உரிமை தடுக்கப்பட்டு வந்தது; கடந்த ஐந்நூறு ஆண்டுகளாக இந்த அக்கிரமம் நீடித்து வந்திருக்கிறது.

ஆண்டுதோறும், குறிப்பிட்ட நாளில், ஆயிரக்கணக்கில் அரிசன வகுப்பினர் அக்கோயிலுக்கு அருகில் கூடி விழா கொண்டாடுவது வழக்கம்; ஆனால், கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவது கிடையாது; கோயில் வெளிப்புறச் சுவற்றைச் சுற்றிவருவதோடு, அவர்கள் திருப்திகொள்ள வேண்டியதுதான்.

சௌராட்டிர முதல் மந்திரி பல அரிசனங்களை அழைத்துக் கொண்டு, அந்த ஆலயத்திற்குள் நுழைந்ததின் மூலம், ஐந்நூறு ஆண்டுகளாக இருந்துவந்த தடை உடைத்தெறியப்பட்டுவிட்டது.

★

பவநகரில் ஆலய நுழைவு

பழம்பெரும் கோயிலான தக்கதேஸ்வரர் போன்ற பல கோயில்களில் பவநகரிலுள்ள சமூக ஊழியர்கள், அரிசனங்களைக் கூட்டிக்கொண்டு நுழைந்தனர்.

உணவு விடுதிகளில், மற்ற மக்களுடன் அரிசனங்களையும் சமத்துவமாக உட்காரவைத்து, சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

[illegible]